Inspector of Police,
Vigilance & Anti Corruption,
Tiruvannamalai District.

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318753

District : மாவட்டம் **Tiruvannamalai** | PS: காவல்நிலையம் **V&AC** | Year: ஆண்டு **2026** | FIR No.: மு.த.அ. எண் **07/2026** | Date: நாள் **28.08.2026**

(i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: **Bharatiya Nagarik Suraksha Sanhita 2023** Sections பிரிவுகள்: **106**

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் **27.08.2026** — Date to : நாள் வரை **Between 15.00 hrs and 23.55 hrs**

Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் - — Time to : நேரம் வரை -

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **28.08.2026** — Time : நேரம் **15.30 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - III** — Time : நேரம் **16.00 Hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **56 Kms North East**

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி — Arni Municipality Office, Tiruvannamalai District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tmt.S.Vaidehi** — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Viswesvaran**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-54** — (d) Nationality : நாட்டினம் **Indian** — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் **Special Tahsildar (Land Acquisition)** — (g) Address : முகவரி **District Backward Classes and Minorities Welfare Office, Collectrate 2nd floor, Vengikkal, Tiruvannamalai District..**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / சந்தேகத்திற்குரிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரம் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. N.T. Velavan, aged 47/2026, Municipal Commissioner, Arani Municipality, 2. Tmt. D. Preethi, aged 27/2026, Junior Assistant / Cashier, Tax Collection, Arani Municipality. 3. Tr. N. Gowtham, aged 35/2026, Assistant Engineer, Engineering Section, Arani Municipality. 4.Tr. P. Gopinath, aged 38/2026, Data Entry Operator and Technical Assistant (Temporary Staff), Arani Municipality. 5. Tr. P. Vasanthakumar, aged 25/2026, (Temporary Staff), Town Survey, Arani Municipality.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 28.08.2026-ஆம் தேதி மதியம் 15.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திருவண்ணாமலை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) / பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி. சோ.வைதேகி அவர்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திருமதி. சோ.வைதேகி, தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. ந.க.எண்..A1/Pdl.708/2026, Dated: 28.08.2026, மற்றும் RC. S2/189/2026, தேதி.27.08.2026 அம்மா, பொருள்: 27.08.2026-ஆம் தேதியன்று ஆரணி நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்ட போது கைப்பற்றிய கணக்கில் வராத முகாந்திரம் கூற இயலாத மற்றும் தகுந்த கணக்கின்றி கூடுதலாக இருந்த

இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28.08.2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

28.08.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.08.2026 at 19.00hrs

Name: பெயர் A.HEMAMALINI
Rank: நிலை Insp. No. எண் VAC
Tiruvannamalai.

கையூட்டு பணம் என சந்தேகத்திற்கிடமாக இருந்த பணம் ரூ. 33,132/–, UPI வரவுத் தொகை ரூ. 91,134/– மற்றும் ஆவணங்களை மேல் நடவடிக்கைக்காக ஒப்படைத்தல் – சம்மந்தமாக. பார்வை: திடீர் ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 27.08.2026.

நான் கடந்த 27.08.2026–ஆம் தேதி பணியில் இருந்த போது வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் பேரில், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.A1/Pdl.708/2026, நாள்.27.08.2026 இன் படி பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான் மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து ஆரணி நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆரணி நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது பிரிவு, சுகாதாரப்பிரிவு, நகர நிலஅளவைப்பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு போன்ற பிரிவுகளில் பொதுமக்கள் கொடுக்கும் மனுக்களின் பேரில் வேலைகளை செய்து முடிப்பதற்கும், ஒப்பந்த பணிகளை முடித்தவுடன் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் பணி முடிவு அறிக்கை (Work Completion Report) வழங்குவதற்கும், பொதுமக்களிடம் இருந்தும் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் கையூட்டு பெறுவதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில் இன்று 27.08.2026 மாலை 15.00 மணிக்கு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இவ்வலுவலகமானது ஆரணி நகராட்சி தற்காலிக பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள ஆரணி நகர கோட்டை கிழக்கு சாலையில் அமைந்துள்ள வெங்கட்ராமன் பூங்காவிற்கு எதிரில் மேற்படி சாலையில் மேற்குப்பகுதியில் கிழக்கு திசை பார்த்தவாறு அமைந்துள்ளது. இவ்வலுவலகத்தின் கட்டிட பிரதான வாயிலின் உள்ளே நுழைந்தவுடன் ஆணையாளர் அறையில் சென்று பார்த்த போது ஆணையாளர் அலுவலகத்தில் இல்லை. பின்னர் நகராட்சியில் பொது பிரிவு அலுவலகத்தின் உள்ளே சென்று மேலாளர் குறித்து கேட்க பின்னர் பெயர் கேட்டு தெரிந்த திருமதி.கவிதா என்பவர் தான் ஆரணி நகராட்சியின் மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவரிடம் நகராட்சி ஆணையர் குறித்து விசாரிக்க அலுவல் பணியாக வேலூர் சென்றுள்ளதாகவும் கூறினார். அவரிடம் சோதனை குழுவினர் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்திக் கொண்டு திடீர் சோதனை மேற்கொள்ளப்போவது குறித்து அவரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்பு தரை தளத்தில் அமைந்துள்ள பொது பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் கணிப்பொறி அறையில் இருந்த பணியாளர்கள் மற்றும் உதவி கணினி திட்ட அமைப்பாளர் மற்றும் முதல் தளத்தில் அமைந்துள்ள பொது சுகாதாரம், பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, நகர நில அளவு பிரிவுகளில் இருந்த பணியாளர்கள் ஆகிய அனைவரையும் தரைதளத்தில் உள்ள ஆணையாளர் அறை முன்பு ஒருங்கிணைத்தும் அவர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள்

தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும், தங்களை தற்சோதனைக்கு உட்படுத்திக்கொண்டும், தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்றும் அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்தும் காண்பிக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலர்கள் ஒவ்வொருவராக சோதனை செய்தும், பெண் அலுவலர்களை காவல் ஆய்வாளர் திருமதி.அ.ஹேமமாலினி அவர்கள் மூலம் கூட்டரங்கு அருகாமையில் உள்ள தனி அறையில் தனித்தனியாக சோதனை செய்யப்பட்டது. சோதனையின்போது பணியாளர்கள் தகுந்த முகாந்திரம் கூறியதால் கண்டறியப்பட்ட பணத்தை அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	கண்டறியப்பட்ட தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	திருமதி.கவிதா, வயது 55, த/பெ.அரிஹரன் அரன் 13, தென்னமரத்தெரு, கொசப்பளையம், ஆரணி, தி.மலை மாவட்டம்	மேலாளர்	இல்லை	இல்லை
2.	திரு,R.மோகன் குமார், வயது 49, த/பெ. இரங்கசாமி, 48/A, முதலியார் காலனி , அரச்சநல்லூர், ஈரோடு மாவட்டம் கைபேசி. 9788653697, தற்காலிக முகவரி, மல்லி செட்டியார் தெரு தங்கும் விடுதி,	பணி ஆய்வாளர்	ரூ.370/-	ரூ.370/-
3.	திரு.கண்ணன், வயது 55, த/பெ. வேணுகோபால், எண்.02, இளங்கோ தெரு, சேத்துப்பட்டு, திருவண்ணாமலை, கைபேசி.94424 12712, 88078 65400	தொழில்நுட்ப உதவியாளர்	ரூ.300/-	ரூ.300/-
4.	திரு.S.E.வெங்கடேசன், வயது 40, த/பெ. ஏகாம்பரம், எண்.84, சாலையனூர் கிராம், கலசபாக்கம் போஸ்ட், திருவண்ணாமலை. கைபேசி.6379776181.	நகர சார் ஆய்வாளர்,	ரூ.190/-	ரூ.190/-
5.	திரு.M.அருண், வயது 26, த/பெ. மணி, 65/A, களத்துமேட்டு தெரு, கொசப்பாளையம், ஆரணி, திருவண்ணாமலை 9791816876	தற்காலிக ஊழியர்,	ரூ.220/-	ரூ.220/-

6.	திரு.G.முருகானந்தம், வயது 60 த/பெ.கோவிந்தன், எண்.850, சிவபுராணி கிராம், திருலோகி, திருவிடைமருதூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம், கைபேசி, 9677369287. தற்காலிக முகவரி. தபால் லாட்ஜ்	உதவி கணினி திட்ட அமைப்பாளர்,	ரூ.25/-	ரூ.25/-
7.	திரு.S.சரவணன், வயது 45, த/பெ.சுப்பிரமணி, எண்.17, மோட்டூர், வெண்மணி நகர், காட்பாடி, வேலூர் மாவட்டம், கைபேசி 97916 28300	அலுவலக உதவியாளர், பொது பிரிவு	ரூ.1,440/-	ரூ.1,440/-
8.	திருமதி.S.பவித்ரா, வயது 28, க/பெ.தினேஷ், எண். 40, சாபாஷ்கான் தெரு, அருணகிரி சத்திரம், ஆரணி, தி.மலை மாவட்டம், கைபேசி. 86810 33008.	தற்காலிக ஊழியர் தட்டச்சர், பொது	இல்லை	இல்லை
9.	திருமதி. சித்ரா வயது 45, த/பெ.சோமசுந்தரம், எண்.33D, பவர்அவுஸ் சைதாப்பேட்டை, ஆரணி, தி.மலை மாவட்டம், கைபேசி. 63801 39789	இளநிலை உதவியாளர் (பொது)	ரூ.500/-	ரூ.500/-
10.	திரு.டில்லி பாலாஜி, வயது 32, த/பெ.சோமசுந்தரம், எண்.2/GB3 பாண்டியன் தெரு, வசந்தம் நகர், போளூர் டவுன் மற்றம் தாலுக்கா, தி.மலை மாவட்டம், கைபேசி. 88706 56485	தொழில்நுட்ப உதவியாளர், நகர்பிரிவு	ரூ.400/-	ரூ.400/-
11.	திருமதி.சங்கீதா, வயது 32, க/பெ.நவீன் குமார், எண்.2/167, நேத்தப்பாக்கம் கிராமம், S.V.நகரம் போஸ்ட், ஆரணி தாலுக்கா, தி.மலை மாவட்டம், கைபேசி. 75581 49712.	தற்காலிக ஊழியர், (பொது)	ரூ.1,000/-	ரூ.1,000/-

மேலும், மேற்படி சோதனையின்போது பணியாளர்கள் தகுந்த முகாந்திரம் கூறாததாலும் அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டிய கையிருப்பு பதிவேட்டை பராமரிக்காததாலும் அதனால் பணம் குறித்த குறிப்பு ஏதும் இல்லாததாலும் மேற்படி தொகை பொது மக்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணம் என்ற சந்தேகத்தின் பெயரில் பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் வழக்கின் விசாரணை நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவியின் பெயர்	தகுந்த முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்ட தொகை ரூபாயில்
1.	திரு.ந. கௌதம், த/பெ. நடராஜன், வயது 35/2026, எண்.470. வடக்கு தெரு, ஆத்துவாம்பாடி கிராமம், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி.8056366458	உதவி பொறியாளர்	6000
2.	திரு.ப.கோபிநாத், வயது 38, த/பெ.பரசுராமன் எண்.58, எம்.ஜி.ஆர் நகர், ஆரணி, வி.ஏ.கே நகர்.கைபேசி. 9698726000	தரவு உள்ளீட்டுப் பணியாளர், தற்காலிக ஊழியர்,	2500
3.	திரு.P.வசந்தகுமார், வயது 25, த/பெ.பிரகாஷ், 2/64, மாரியம்மன் கோவில் தெரு, இரும்பேடு, ஆரணி, திருவண்ணாமலை கைபேசி. 6385316466	தற்காலிக ஊழியர்,	1000
மொத்தம்			9500

மேற்படி சோதனையின் தொடர்ச்சியாக ஆரணி நகராட்சி அலுவலகத்தின் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் இருந்த ஒவ்வொரு பிரிவுகளையும் சோதனை குழுவினருடன் பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆரணி நகராட்சி அலுவலகமானது, பின்வருமாறு அமைந்துள்ளது. ஆரணி நகராட்சி அலுவலகத்தின் உள்ளே நுழைந்தவுடன் கிழக்கு பக்கம் தகவல் மையம் உள்ளது. வடக்கு பக்கம் வரி வசூல் மையம் மற்றும் கணினி மையம் அமைந்துள்ளது, அதன் பிறகு உள்ளே இரும்பு கதவு கிழக்கு பார்த்தவாறு உள்ளது. பின்பு நீளமான வராண்டா உள்ளது. அதற்கு நேர் எதிரே சேர்மன் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களது அறை அடுத்த அடுத்ததாக அமைந்துள்ளது. அதற்கு தெற்கே முதல் தளம் செல்லும் படிக்கட்டு உள்ளது. அதன் பின்புறம் ஆலோசனைக் கட்டிடம் உள்ளது. பிறகு வராண்டாவுக்கு நேர் எதிரே ஒரு கழிவறை உள்ளது. அதற்கு எதிரே பதிவு அறை உள்ளது. அதன் பின்பு வருவாய் பிரிவு மற்றும் பொதுப்பிரிவு தனித்தனி அறைகளாக உள்ளது. நகராட்சி கட்டிடத்திற்கு தெற்கில் அண்ணா சிலை மற்றும் பூங்கா அமைந்துள்ளது. நகராட்சி நுழைவு வாயில் கிழக்கே வெங்கட்ராமன் பூங்கா அமைந்துள்ளது. மேலும், படிக்கட்டு வழியாக மேலே சென்றால் முதல் தளம் வரும் இதில் நீளமான வடக்கு தெற்கில் வராண்டா ஒன்று உள்ளது. முதல் அறை பொறியாளர் அறை, இரண்டாம் அறை மின்சாதனங்கள் பழுது பார்க்கும் அறை, மூன்றாவது அறை பிட்டர் அறை, நான்காவது அறை பொது சுகாதாரப்பிரிவு, ஐந்தாவது அறை நகர சார்ஆய்வாளர்

அறை, ஆறாவது நகர அமைப்பு அலுவலர் என தனித்தனி அறைகளாக அமைந்துள்ளது. அதற்கு மேற்கே மேநீர் தேக்கத்தொட்டி ஒன்று உள்ளது. அதன் தெற்கே தேவையற்ற பொருட்களை சேமித்து வைக்கும் அறை உள்ளது. முதல் அறைக்கு மேற்கில் கழிவறை ஒன்று உள்ளது. இவ்வாறாக உள்ள அலுவலகத்தின் மாதிரி வரைபடம் வரையப்பட்டது. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு தரை தளத்தில் அமைந்துள்ள வரிவசூல் மையம், தகவல் தொழில்நுட்ப பிரிவு, பொது பிரிவு, வருவாய் பிரிவுகளிலும், முதல் தளத்தில் உள்ள பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவு, நகர நில அளவைப்பிரிவு, நகர ஊரமைப்பு பிரிவு, என அனைத்து பிரிவுகளிலும் ஒவ்வொரு பிரிவு அறையாக பிரிவு அலுவலர்கள் முன்னிலையில் அலுவலகத்தில் இருந்த இருக்கையின் முன்பாக இருந்த மேஜை இழுவறை, மேலும் அனைத்து அலமாரி மற்றும் இரும்பு பீரோக்கள் குழு மூலம் சோதனை செய்யப்பட்டது. சோதனையின் போது அவ்விடங்களில் சந்தேகத்திற்கிடமான வகையில் எவ்வித பணமோ, பொருட்களோ ஏதும் புலப்படவில்லை. நகராட்சி அலுவலகத்தின் தரை தளத்தில் உள்ள வரிவசூல் மையமானது இரண்டு கணிப்பொறிகள் மற்றும் பிரிண்டர்களுடன் நான்கு வரிசெலுத்தும் பிரிவுகளை கொண்டதாக இருந்தது. அந்த வரிவசூல் மையத்தை முழுமையாக சோதனை செய்தபோது அங்கு வரி செலுத்துப்பட்ட இரசீதுகள் மற்றும் வசூலிக்கப்பட்ட தொகை வைக்கப்படும் இரும்பு பெட்டி இந்தது. அங்கு இளநிலை உதவியாளர் நிலையில் காசளராக பணியில் இருந்த திருமதி.தி.பிரீத்தி, என்பவரை விசாரிக்க மேற்படி இரசீதுகள் அனைத்தும் வரி செலுத்தியவர்களுக்கும், செலுத்த வேண்டியவர்களுக்கு வழங்க வேண்டியது எனவும் அந்த இரும்பு பெட்டி குறித்து விசாரிக்க அதற்கு உண்டான சாவி எடுத்து திறந்து காண்பித்தார். அதில் வசூலிக்கப்பட்ட தொகை விவரம் கேட்க அதிலிருந்த தொகையை பணம் எண்ணும் கருவியின் உதவியுடன் எண்ணி பார்க்க அதில் ரூ.3,57,010/- இருந்தது, அதனுடன் வங்கியில் செலுத்துவதற்கான 27.08.2026 ஆம் தேதியிட்ட கனரா வங்கியின் 8 செலான்கள் நகராட்சி ஆணையரின் கையொப்பமிடப்பட்டு பின்வருமாறு இருந்தன.

வ.எண்.	வரியின் வகை	வங்கி கணக்கு எண்.	தொகை ரூபாயில்
1,	நூலக வரி	0949101023050	14811
2,	அம்மா உணவகம்	0949101039969	2450
3,	சேவை வரி	0949101043739	9171
4,	வரவு இன வருவாய்	0949101023053	155754

5.	வரவு இன வைப்பு தொகை	110267366495	22083
6.	குடிநீர் மற்றும் வடிகால் நிதி	0949101023051	114047
7.	உட்புற குடிநீர் குழாய் அமைப்பு பணி நிதி	0949101045037	3402
8.	ஆரம்ப கல்வி நிதி	0949101023049	24660
மொத்தம்			3,46,378

மேற்படி இரும்பு பெட்டியில் இருந்த பணம் ரூ.3,57,110/- குறித்து விசாரித்த போது திருமதி.தி.பிரீத்தி அந்த பணம் கடந்த 25.08.2026 முதல் பல வகைகளில் வரி வசூலிக்கப்பட்ட வரி தொகை எனவும் தொகை குறிக்கப்பட்ட வங்கி செலான்கள் குறித்து விசாரிக்க மேற்படி வசூலிக்கப்பட்ட தொகையில் மேற்கண்டவாறு கூறியுள்ள சம்பந்தப்பட்ட வங்கி கணக்குகளில் செலுத்துவதற்காக தயார் செய்யப்பட்டது எனவும் கூறினார். மேற்கொண்ட இரண்டு தொகைகளையும் ஒப்பிட்டு பார்க்க வசூலிக்கப்பட்ட தொகை ரூ.10,632/- கூடுதலாக இருப்பது குறித்து கேட்க தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணமானது வரி தொகை வசூலிக்கும்போது பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட இலஞ்ச பணம் என்ற சந்தேகத்தின் பேரில் பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் வழக்கின் நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேலும் திருமதி.தி.பிரீத்தி என்பவருடைய பணப்பையை சோதனை செய்த பார்க்க அதில் ரூ.13,000/- இருந்தது, அது குறித்து விசாரிக்க அந்த பணத்திற்கான சரியான முகாந்திரம் கூறாததாலும், அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டிய கையிருப்பு பதிவேட்டை பராமரிக்காதாலாலும் அதனால் பணம் குறித்த குறிப்பு ஏதும் இல்லாததாலும் மேற்படி பணமானது இலஞ்ச பணம் என்ற சந்தேகத்தின்பேரில் பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் வழக்கின் நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேலும் திருமதி.தி.பிரீத்தி என்பவருடைய கைபேசியின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் UPI பரிவர்த்தனைகளை பார்வையிட்டபோது 2026 ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் ரூ.91,134/- அவருடைய GPay மூலமாக வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது, அதுகுறித்து விசாரிக்க தகுந்த முகாந்திரம் ஏதும் கூறவில்லை எனவே மேற்படி தொகையை கையூட்டாக பெறப்பட்டது என சந்தேகத்தின் பெயரில் இலஞ்சப் பணமாக கணக்கில் எடுத்து கொள்ளப்பட்டது. மேலும், நகராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் இயங்கும் பொறியியல் பிரிவு அலுவலகத்தின் 3 தனித்தனி அறைகள் மற்றும் நிலஅளவு பிரிவு அறை ஆகிய இடங்களில் போடப்பட்டிருந்த அனைத்து மேஜை, இரும்பு பீரோ ஆகிய

இடங்களை குழுவினருடன் சோதனை செய்து பார்க்க அவ்விடங்களில் சந்தேகத்திற்கு இடமான பணமோ, பொருளோ புலப்படவில்லை. மேலும், நகராட்சி அலுவலகத்தின் இதர பிரிவுகளான பொது பிரிவு, வருவாய் பிரிவு, முதல் தளத்தில் உள்ள பொது சுகாதார பிரிவு, நகர ஊரமைப்பு பிரிவு என அனைத்து பிரிவுகளிலும் தனித்தனியாக சோதனை மேற்கொண்டபோது பொது சுகாதார பிரிவு, நகர அமைப்பு பிரிவு கதவுகள் பூட்டப்பட்டிருந்து மேலும் நகர ஊரமைப்பிரிவில் பணியாளர்கள் யாரும் அலுவலகத்தில் இல்லை இதுகுறித்து நகராட்சியின் மேலாளர் திருமதி.கவிதா என்பவரை விசாரித்த போது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாடு முழுவதும் ஒரு நாள் மட்டும் தற்செயல் விடுப்பு எடுத்து வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டுள்ளதால் அலுவலர்கள் யாரும் பணிக்கு வரவில்லை என கூறினார். இந்த திடீர் சோதனை குறித்து ஆரணி நகராட்சியின் ஆணையாளர் திரு.N.T.வேலவன், என்பவருக்கு சுமார் 19.30 மணிக்கு தொலைபேசியின் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதன் பெயரில் 21.00 மணிக்கு நகராட்சி அலுவலகம் வந்த அவரிடம், சோதனை குழுவினர், பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் அறிமுகம் செய்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டது. மேலும் ஆரணி நகராட்சி அலுவலகத்தின் வாயிலிலோ, எந்த ஒரு அலுவலக பிரிவுகளிலும் ஊழல் தடுப்பு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் அலுவலக முகவரி குறித்த விழிப்புணர்வு பலகை ஏதும் வைக்கப்படவில்லை. மேலும், ஆரணி நகராட்சியின் நில அளவு பிரிவில் பணியில் இருந்த தனி நபர்கள் 1. திரு.P.வசந்தகுமார், வயது 25, த/பெ.பிரகாஷ், 2/64, மாரியம்மன் கோவில் தெரு, இரும்பேடு, ஆரணி, திருவண்ணாமலை மற்றும் 2. திரு.M.அருண், வயது 26, த/பெ. மணி, 65/A, களத்துமேட்டு தெரு, கொசப்பாளையம், ஆரணி, திருவண்ணாமலை ஆகியோரை தனித்தனியாக விசாரிக்க திரு.வசந்தகுமார் என்பவர் சுமார் 5 ஆண்டு காலமாகவும், திரு.அருண் என்பவர் சுமார் 4 ஆண்டு காலமாகவும் நில அளவு பிரிவில் பணிபுரிந்து வருவதாகவும் அவர்கள் இருவருக்கும் ஊதியமாக ஒவ்வொருவருக்கும் தலா மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/- பணமாக கையில் நகர நில அளவை சார் ஆய்வாளர் திரு.வெங்கடேசன் என்பவர் மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர். இது குறித்து அவர்கள் பணி நியமனம் தொடர்பாக அரசு ஆணை, மன்ற தீர்மானம் ஆகியன குறித்து சார் ஆய்வாளர் திரு.வெங்கடேசன் மற்றும் நகராட்சி ஆணையாளர் திரு.N.T.வேலவன் அவர்களிடம் கேட்க அவ்வாறு ஏதுமில்லை எனவும் தன்னிச்சையாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்கள். பின்னர் ஆரணி நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு, பொறியியல் பிரிவு, நகரஅளவைப்பிரிவு, பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள், கணினி உதவியாளர்கள் ஆகியோர்களின் 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கான வருகைப்பதிவேடு பக்கத்தின் நகல்கள் எடுத்து சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்கள்,

நகராட்சி ஆணையர், பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், வசூலிக்கப்பட்ட தொகையை வங்கியில் செலுத்துவதற்காக தயார் செய்யப்பட்ட கனரா வங்கியின் 8 செலான்கள், 25.08.2026 ஆம் தேதிக்கு உண்டான ஆரணி நகராட்சியின் வங்கி கொடுப்பு சீட்டுகளின் தொகுப்பு பட்டியல் பக்கம் 01 முதல் 03 தாள்கள், வங்கி கணக்கு வாரியாக தனித்தனியாக வழங்கப்படும் வங்கி கொடுப்பு சீட்டு–15 தாள்கள் கடந்த 25.08.2026 ஆம் தேதி வரி வசூலிக்கப்பட்ட தொகை செலுத்தப்பட்ட நபர்களின் பெயர் ஆகியவற்றின் பட்டியல் 11 தாள்கள். வரி வசூல் செய்யப்பட்ட (பணம், காசோலை மற்றும் ஸ்வைப் கார்டு) இனங்களின் தொகுப்பு பட்டியல் தாள் –1 மற்றும் தட்டச்சர்கள் திருமதி.S.பவித்ரா & திருமதி.சங்கீதா, ஆகியோரை தற்காலிக ஊழியராக நியமிக்கப்பட்டதற்கான மன்ற தீர்மான நகல், திரு.வெங்கடேசன் என்பவரை ஸ்ரீ ஆஞ்சநேயா ஆடவர் குழு மூலம் நியமிக்கப்பட்டதற்கான மன்ற தீர்மான நகல்கள் மற்றும் பொறியியல் பிரிவில் பணிபுரியும் தரவு உள்ளீட்டுப் பணியாளர் திரு.ப.கோபிநாத், என்பவர் நியமிக்கப்பட்டதற்கான மன்ற தீர்மான நகல் ஆகியவற்றில் நகராட்சி ஆணையர், பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், ஆரணி நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களிடம், தகுந்த முகாந்திரம் கூற இயலாத ரொக்கத்தொகை ரூ.33,132/– ஐ இந்த திடீர் சோதனையில் கையூட்டு எனப்படும் இலஞ்சமாக பெறப்பட்ட பணம் என சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. மேலும், திருமதி.தி.பிரீத்தி என்பவருடைய கைபேசியின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் UPI பரிவர்த்தனைகளை பார்வையிட்டபோது 2026 ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் ரூ.91,134/– அவருடைய GPay மூலமாக வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையை கையூட்டாக பெறப்பட்டது என சந்தேகத்தின் பெயரில் இலஞ்சப் பணமாக கணக்கில் எடுத்து கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது யாருக்கும் மனதளவிலோ, உடலளவிலோ எந்த துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. மேலும், அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுக்கோ, பொருட்களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படுத்தவில்லை. பின்பு மீண்டும் குழுவினர்களை தற்சோதனைக்கு உட்படுத்தி கொண்டும், தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என அலுவலக ஊழியர்கள் முன்பு காண்பிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் செயல்முறை இன்று 27.08.2026 இரவு 23.55 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத கையூட்டு பணம் என சந்தேகத்திற்கிடமாக இருந்த பணம் ரூ.33,132/– (ரூபாய் முப்பத்தி மூணாயிரத்து நூற் முப்பத்தி இரண்டு மட்டும்) மற்றும் ஆரணி நகராட்சி அலுவலக பிரிவுகளின் 2026 ஆகஸ்ட் மாதத்திற்கான வருகைப்பதிவேடு நகல்கள் ஆகியவற்றுடன் இணைத்து இந்தப் புகார் மனுவைக்

கொடுக்கிறேன். இப்புகார் மனுவின் பேரில் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx) சோ.வைதேகி, 28.08.26, தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், திருவண்ணாமலை.

Sir/Madam,

Received a complaint on 28.08.2026 at 15.30 hrs and a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.07/2026 u/s 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 and 106 BNSS 2023, on 28.08.2026 at 16.00 hrs.

The FIR in original along with the complaint is being sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tiruvannamalai and the other copies to the officers concerned.

(அ.ஹேமாமாலினி),
28.08.2026,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவண்ணாமலை